1975 நவம்பர் 6]

திரு. தி. பொன்னுமலை: தலைவர் அவர்களே, சாத்தப்பாடிக் கிராமம் பின் தங்கிய மலைப் பகுதி கிராமம். எனவே அந்த கிராமத்திற்கு மாணவர் இல்லம் விரைவாக ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவ்வில்லம் ஜூலை மாதத்தில் ஏற்படுத்தப்பட்டுவிட்டது என்பதை என் பதிலில் சொன்னேன்.

Broadcasting Unit

* 208 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :--

(*a*) whether the students of the Tamil Nadu Polytechnic in Madurai have fabricated a broadcasting unit in January 1975; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: *(அ) ஆம்.*

(இ) இறுதி ஆண்டு மின் இயல்துறை மாணவர்கள் 10 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு ஒலி பரப்பக்கூடிய 10 வாட் ஒலி பரப்பி ஒன்றை சுமார் ரூபாய் 500 செலவில் செய்துள்ளார்கள்.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister whether such broadcasting units (watts transmitter) discovered by these electrical engineering students in the Madurai Polytechnic will be popularised in the entire State?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பல் தொழில் நுட்பப் பள்ளிகளில் பயிலும் எலக்டிரிகல் என்ஜினியரிங் மாணவர்களுக்கு ஒரு பிராஜெக்ட் கொடுக்கப் பட்டது. அதில் ஒன்று தான் ரூ. 500 செலவில் 10 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு ஒலி பெருக்கக்கூடிய டிரான்ஸ்மிட்டர் ஒன்றை கண்டு பிடித்திருக்கிறார்கள். அதை ஒரு சுற்றடுக்கில் உள்ள மாணவர்களுக்குப் பயன் படக்கூடிய அளவுக்கு செயல்படுத்த வேண்டும் என்பது தான் நோக்கம். அதை ஒரு ஸ்டேஷனை வைக்க முடியாது. அப்படி வைப்பதற்கு இந்திய சர்க்கார் அனுமதி வேண்டும். பெரிய அளவுக்கு ஒரு திட்டம் தீட்டவேண்டுமானால் அதற்கு அதிக செலவாகும். மாணவர்கள் ரூ. 500 செலவில் ஒரு டிரான்ஸ்மிட்டரைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்களின் திறமை பாராட்டப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, இதைக் கண்டு பிடித்த மாணவர்கள் பாராட்டப்பட்டதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். படிப்பு நேரங்களைத் தவிர மற்ற ஓய்வு நேரங்களில் இவ்விதமான நல்ல முறையில் நேரத்தை செலவிட இன்சென்டிவ் ஏதாவது பரிசாகக் கொடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆண்டு தோறும் பாலிடெக்னிக்கில் புதிய முறைகள் கண்டு பிடிப்பவர்களுக்கு இன் சென்டிவ் என்ற முறையில் பரிசுகள் வழங்கும் திட்டம் உள்ளது. இந்தப் பரிசு வழங்கப்பட்டதா வழங்கப்படுமா என்பதற்கான குறிப்புகள் இப்போது இல்லை. ஆண்டுதோறும் ஒரு பிராஜெக்ட், அதாவது டிரான்ஸ்மிட்டர் ஏ. சி. வோல்ட்டேஜ் என்ற அளவுக்கு ஒரு பிராஜெக்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே பாலிடெக்னிக் மாணவர்கள் பாட்டரியில் கார் ஓட்டமுடியும் என்று நிரூபித்துக் காட்டினார்கள். அவர்களுக்கு ஏற்கனவே பரிசுகள் வழங்கப் பட்டன. பெரிய அளவில் கமர்சியல் அடிப்படையில் செய்ய முடியுமா என்பதை மாணவர்களும், ஆசிரியர்களும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மதுரை பாலிடெக்னிக்கின் மாணவர்கள் சிறப்பான ரிசர்ச் செய்திருக்கிறார்கள். இந்த மாணவர்களின் லிஸ்டை எடுத்து வேறு மாநிலத்திற்கு பயிற்சி பெறுவதற்கோ அல்லது அவர்களின் அனுபவத்தை தெரிவிப் பதற்கோ செல்லுவதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்களுக்கும் தேவையான ஊக்கம் அளிக்கலாம். பாலிடெக்னிக் முதல்வர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அந்த வகையில் விண்ணப்பித்தால் அரசாங்கம் அந்த வகையில் ஊக்கம் அளிக்கும்.

தமிழ் சுருக்கெழுத்து ஆராய்ச்சி நிலையம்.

* 209 வினு—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு கல்வி-சுற்று லாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

தமிழ் சுருக்கெழுத்து வளர்ச்சி ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.